C.C 216/2022

Pw1– தமிழ்ச்செல்வி க/பெ.சசிக்குமார்

Date 10.10.2023

(Accused absent U/s. 317 Cr.P.C petition filed heard and allowed.)

<u>மனு அனுமதிக்கப்பட்டு மனுவின்பேரில் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் புகார்மனுவில் சொல்லியுள்ள விவரங்களுக்கும்,. போலிசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் உள்ள விவரங்களுக்கும் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களுக்கும் முரண்பாடுகள் காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல.

2. புகார்மனுவை காவல் நிலையத்தில் வைத்து எந்த தேதியில் எழுதி கொடுத்தேன் என்றால் 29.11.2021ம் தேதி எழுதி கொடுத்தேன் சம்பவம் நடந்த மறுநாள் அளித்தேன். புகார் அளித்த அன்று மட்டும் போலிசார் என்னை விசாரித்தார்கள் அதன்பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை

3. சம்பவ இடம் வளைவான பாதை என்றால் இல்லை நேரான சாலை. இரவு நேரம் அந்த சாலையில் மின்கம்பங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்கான எந்த ஒரு கையொப்பமும் போலிசார் என்னிடம் பெறவில்லை என்றால் சரிதான்.

4. எதிரிக்கும் எனது கணவருக்கும் தொழில் விரோத சம்பந்தமாக எந்த வித வழக்கும் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். உண்மையில் அதுபோல முன்விரோதம் இருந்திருந்தால் வழக்கை தாக்கல் செய்திருப்பீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

5. நான் எனது கணவர் கேட்டுக் கொண்டதின்பேரில் எதிரி மீது பொய் புகார் அளித்து அதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தவுடன் நான் வீட்டிற்கு சென்று 100 க்கு போன் செய்ததாகவும், உடனே ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலைய போலிசார் வீட்டிற்கு வந்ததாகவும் எனது புகார்மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. நான் எனது புகார்மனுவில் சம்பத்தின்போது அந்த வழியாக வந்த சிலர் விலக்கிவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் சொல்லப்பட்ட வகையில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.